**சிவகங்கை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

( 16 -11-2016 – 20-11-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 15-11-2016

**கடந்த கால வானிலை 11-11-2016 முதல் 14-11-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 2.4 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 32-34 |
| குறைந்த படச வெப்பநிலை (செ) | 23-25 |
| மேக மூட்டம் | 5-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 52-75 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 6-10 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 20-11-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 16.11.16 | 17.11.16 | 18.11.16 | 19.11.16 | 20.11.16 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 1 | 3 | 1 | 1 | 2 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 62 | 62 | 62 | 62 | 62 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

**குறுஞ்செய்தி:**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வானம் மேகமூட்டத்துடனே காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல் மற்றும் பருத்தி**

- நிலவும் வானிலையால் நெற்பியர்கிளில் காணப்படும் நோய்களை கட்டுபடுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் ”சூடோமோனஸ்” அல்லது 10 லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் ”டைதேன் எம்45” என்ற மருந்தினை கலந்து தெளிக்கலாம். இதில் 1 லிட்டர் தண்ணீருக்கு 1மிலி ஒட்டுபசையினை கலந்து கொள்ளவும்.

- நிகழும் தட்பவெட்ப சூழ்நிலையில், பருத்தி பயிரில் வெள்ளை ஈ மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்குதல் காணப்படலாம். இதனை தடுக்க இமிடாக்லோப்ரிட் என்ற மருந்தினை ஹெக்டேருக்கு 100 மில்லி என்ற அளவில் தெளிக்கலாம். இதனை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த மஞ்சள் நிறபொறியினை ஏக்கருக்கு 10 இடங்களில் வைத்து கவர்ந்து அழிக்கலாம்.

- தற்போதைய தட்பவெட்ப சூழ்நிலையில் நோய்த் தாக்குதலில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க தொழுவத்தை சுத்தமாக வைத்திருக்கவும். ஒரு லிட்டர் தண்ணீரில் 1% பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலினை பயன்படுத்தி பால் கறப்பதற்கு முன்னும் பால் கறந்த பின்பும் பசுமாட்டின் மடியை கழுவி விடவும்.